


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் அக்டோபர் 29 * 2025 * மலர் -1 * இதழ்-149 * VOL-1 * ISSUE-149 விலை ரூ.3 * பக்கம் -4



மருதமலை ஸ்ரீ சுப்பிரமணிய சாமி கோவிலில் கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் நிகழ்வு நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு முருகன் சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்ஹாரம் நிகழ்வை கண்டு ரசித்தனர்.



நீர்வரத்து குறைந்ததால் 7 நாட்களுக்கு பிறகு ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளிக்க, பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியதையடுத்து சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்தும் குளித்தும் மகிழ்ந்தனர்.

### மாமல்லபுரம் அருகே உள்ள பூஞ்சேரியில் நடந்த

# முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகளுக்கு பயிற்சி!

## அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உட்பட 2,500 பேர் பங்கேற்றனர்!!



சென்னை, அக்.29

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க நிர்வாகிகளுக்கு "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" என்ற பயிற்சிக் கூட்டம் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தொகுதி பார்வையாளர்கள் உட்பட 2,500 பேர் பங்கேற்றனர்.

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு ஏப்ரலில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பொதுத்தேர்தலில் 200தொகுதிகளில்தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கை முன் வைத்து, தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்துள்ளார்.

இதற்காக தி.மு.க.வில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவை ஏற்கனவே அமைத்துள்ளார். இந்த குழுவில் கட்சியின் முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு இடம் பெற்றுள்ளனர்.

இக்குழு தி.மு.க.வில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புகளை தலைமைக்கு தெரிவித்து வருகிறது. அதன் அடிப்படையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் உள்ள வெற்றி வாய்ப்பு நிலவரங்களை சேகரித்து அதில் 'பலவீனமான' தொகுதிகளையும் பட்டியல் எடுத்து வைத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக தி.மு.க.சென்னைவினரை அண்ணா அறிவாலயத்துக்கு அழைத்து விசாரித்து வருகிறார். தொகுதியை மேலும் வலுவாக்கும் வகையில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இது வரை 70 தொகுதிகளுக்கும் அதிகமாக ஆய்வு செய்துள்ளார்.

இதன் அடுத்த கட்டமாக வாக்குச்சாவடி முகவர்களுக்கு (பி.எல்.ஏ.2) தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு மூலம் இரண்டரை கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

மேலும் தேர்தல் பணிகளை மேற்பார்வையிட மண்டல அளவில் பொறுப்பாளர்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நியமித்துள்ளார்.

அதன்படி சென்னைக்கு தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ஆ.ராசாவும், தென் மண்டல தேர்தல் பொறுப்பாளராக கனிமொழி எம்.பி.யும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதே போல் ஒவ்வொரு மண்டலத்துக்கும் அமைச்சர்களை நியமித்துள்ளார். இவர்கள் பாக முகவர்கள் கூட்டத்தை கூட்டி ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இந்தநிலையில், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்ற பயிற்சி கூட்டம் மாமல்லபுரம் அருகே உள்ள பூஞ்சேரியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர்டி. ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, திருச்சி சிவா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி, ஆ.ராசா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தபயிற்சிகூட்டத்தில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,

இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகரப் பகுதி பேரூர் கழக செயலாளர்கள் என 2,500–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தி.மு.க.வின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இதில் கலந்து கொண்டு பேசினார்.

# சட்டமன்ற உறுப்பினர் அலுவலமாக செயல்படும் தென்காசி மாவட்ட தி.மு.க. அலுவலகம்!

## தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பெருமிதம்!!



சுரண்டை அக்29

தென்காசிதெற்குமாவட்டதிமுகஅலுவலகம் மக்கள் பணியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் போல் செயல்படுகிறது.

சுரண்டை நகர திமுக செயலாளராக இருந்த ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளராக பொறுப்பேற்றதிலிருந்து சுரண்டையில் அன்பகம் என்ற பெயரிலும், தென்காசியில் கலைஞர் அறிவாலயம் என்ற பெயரிலும் அலுவலகம் அமைத்து கட்சிக்காரர்கள்சந்திப்பு மட்டுமின்றி, மாவட்ட திமுக அலுவலகத்தை தேடி வரும் பொது மக்களையும்சந்தித்தது வருகிறார். பொதுமக்கள் கொண்டுவரும் அவர்கள் பகுதி பிரச்சனையை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கொண்டு சேர்க்கிறார். அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளான பள்ளி, போக்குவரத்து, குடிநீர் தேவைகள் குறித்த கோரிக்கைகளை மனுக்களாக தயாரித்து அந்தந்த துறை சார்ந்த அமைச்சர்களிடம் வழங்கிவருகிறார். விளையாட்டுபோட்டிகள்நடத்தவும் கோவில் திருவிழாக்கள் நடத்தவும் காவல்துறையினரிடம் முறையாக அனுமதி வாங்கி கொடுக்கிறார். மேலும் பரிசுத் தொகையும் வழங்கி வருகிறார். கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தென்காசி மாவட்டத்தில் சுரண்டை, தென்காசி, கடையநல்லூர், ஆலூடையானூர், மடத்தூர், பட்டமுடையார்புரம், சாலைப்புதூர் ஆகிய பகுதியில் கலைஞர் அறிவாலயம் திறக்கப்பட்டு அதில் மாணவர்கள்போட்டி தேர்வை எதிர்கொள்ள பல லட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் மாணவர்கள் படிப்பதற்காக கலைஞர் அறிவாலயத்தில் திமுக உடன் பிறப்புகள் ஒத்துழைப்புடன் வைக்கப்பட்டுள்ளது. சுரண்டை கலைஞர் அறிவாலயத்தில் படித்த மூன்று பேர் அரசு பணிக்கு சென்று உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சாம்பவர்வடகரை அரசு பள்ளி மாணவர்களுக்கு பெஞ்ச், டெஸ்க் வாங்க ஒரு லட்சம், கீழச் சுரண்டையில் பள்ளி கட்டிடம் கட்ட ரூபாய் ஐம்பதாயிரம் மேலும் மாவட்ட அளவில் அரசு பள்ளியில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறார். கலைஞர் அறிவாலயத்திற்கு புத்தகங்கள் மட்டும் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் தனது சொந்த செலவில் வழங்கி உள்ளார். தமிழகத்திலேயே எங்கும் இல்லாத வகையில் சுரண்டையில் உள்ள முடி திருத்தகத்தில் அமைக்கப்பட்ட நூலகத்தை திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார். மேலும் தந்தை பெரியார், முன்னாள் முதல்வர் அண்ணா, கலைஞர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி பிறந்தநாள் விழாவை நலத்திட்ட உதவி வழங்கி கொண்டாடி வருகிறார். தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழியில் தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தென்காசி, ஆலங்குளம், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி க்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதி உதவி மற்றும் பரிசு கோப்பைகளை வழங்கி மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். மேலும் கோவில் திருவிழாவில் அன்னதானம் வழங்குதல், கோவில் திருக்குடமுழுக்கு போன்ற பணிகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறார். நலிந்த திமுகவினர் வீட்டில் ஏதாவது சொக்க நிகழ்ச்சி நடந்தால் முதல் அழகாக கலந்து கொண்டு இறுதிச்சடங்கு இருக்கு அவரால் முடிந்த நிதி உதவி வழங்கி வருகிறார். மருத்துவ செலவிற்கு நிதியுதவி வழங்கி வருகிறார். தலைமையில் இருந்து அறிவிக்கப்படும் அனைத்து வகையான கூட்டங்களிலும் தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். மாவட்ட பொறுப்பாளராக இருந்தாலும் கட்சித் தொண்டர்கள் வீட்டு அனைத்து விசேஷங்களிலும் கலந்து கொள்கிறார்.

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கூறியுள்ளார்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினரால் ஒத்திகை நிகழ்வு கலெக்டர் சரவணன் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்ட செரிபிள் பாலிசி அசோசியேஷன் ( மூளை முடக்குவாத குழந்தைகள் ) இதிலிருந்து சென்னையில் நடைபெற்ற (CMTROPY) முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு தர்மபுரி மாவட்டத்தில் இருந்து மூளை முடக்குவாத குழந்தைகள் கால்பந்து விளையாட்டு (7 நபர்கள்)மற்றும் குண்டு எறிதல் போட்டியில்(3 நபர்கள்) கலந்து கொண்டனர். அதில் நவீன் என்ற மாணவன் குண்டறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று பிரான்ஸ் மெடல் மற்றும் ரூபாய் 50,000 பரிசு பெற்றுள்ளார் கால்பந்து விளையாட்டில் இரண்டாம் இடத்தை பெற்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் இவர்களை தர்மபுரி மாவட்ட ஆட்சியர் சதீஷ் அவர்கள் மற்றும் D.சாந்தி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் பாராட்டிவாழ்த்த தெரிவித்தனர். மற்றும் தர்மபுரி செரிப்ரல் பாலிசி அசோசியேசன் மாவட்ட செயலர் கே. எம். ஜெயபூர்ணிமா மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சாக்ரடீஸ் மற்றும் செந்தில் பயிற்சியாளர் விஜயன் கிரீன் பார்க் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் பாராட்டி வாழ்த்துக்கள் கூறினார்.

# பைக் மோதி விவசாயி படுகாயம்!

நத்தம், அக்,29

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்கோவில்பட்டியை சேர்ந்தவர் கிருஷ்ணன்(80). விவசாயி.இவர் சம்பவத்தன்று மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சேர்வீடு பிரிவு அருகே உள்ள தனது தோட்டத்திற்கு சென்று விட்டு வீட்டிற்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தார். அப்போது மதுரை நோக்கி ஜெயகிருஷ்ணன் என்பவர் ஓட்டி வந்த பைக் சாலையில் நின்று கொண்டிருந்த கிருஷ்ணன் மீது மோதியது. இதில் கீழே விழுந்து பலத்த காயமடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து போலீஸ்சப்இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் பணி 2026 முன்னிட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தேர்தலில் பயன்படுத்தப்படும் பொருட்கள் அடங்கிய கிட் யினை 3 நபர்களுக்கு வழங்கினார். உடன் வருவாய் அலுவலர் திரு.நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பூர் பத்ரகாளியம்மன் கோவில் மண்டல பூஜை நிறைவு விழா!

திருப்பூர்,அக்.29

திருப்பூரின் 125 ஆண்டு பழமையான அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவில் மண்டல பூஜை நிறைவு நாளில் திரளான பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் பெற்றனர்.

திருப்பூர் ரெயில் நிலையம் அருகில் காலேஜ் ரோட்டில் உள்ள 125 ஆண்டு பழமையானஅருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் திருக்கோவில் 2வது கும்பாபிஷேக விழா கடந்த செப்.,மாதம் 11ந் தேதி மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கோவில் கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து 12.09.2025ந் தேதி முதல், 26.10.2025ந் தேதி வரை தொடர்ந்து 45 நாட்கள் சிறப்பு மண்டல பூஜை நடைபெற்றது. மண்டல பூஜை நிறைவு நாளில் நேற்று சிறப்பு யாகம் வேள்வி நடைபெற்றது. இதனை செல்வகுமார் சுவாமிகள், காமாட்சி தாசன் சுவாமிகள் நடத்தி வைத்தனர். தொடர்ந்து



108 சங்குகளால் சிறப்பு அபிஷேக பூஜை நடைபெற்றது. பின்னர் மண்டல் பூஜையில் கலந்து கொண்ட கட்டளைதார்களை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு தனித்தனியாக பொன்னாடை அணிவித்து, பிரசாதம் ஆகியவற்றை கோவில் கமிட்டி சார்பில் வழங்கப் பட்டது.

அனைத்து நிகழ்வு களிலும் ஏராளமான பக்தர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆசி பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருப்பணிக்குழு உறுப்பின்ர்கள் அகஸ்தியன் பழனிசாமி, எஸ்.ரமேஷ், எஸ்.மகேஷ், சி. வெங்கடேஷ், சிவகுமார், மோகன், ரவிக்குமார், பெப்சி பாலு, முருகசாமி, சதீஷ்குமார், பொன்னுசாமி, மோகன்ராஜ், சதாசிவம், மணிகண்டன் மற்றும் ஆர். ராஜேந்திரன்,சண்முக முதலியார் வம்சவழி பேரன்கள் பி.துரைசாமி, ரவி (எ) வி.முத்துவேல், வி.பத்மநாபன்,பி.அண்ணாமலை, ராஜா, என்.சதீஷ், கே.விஜய் மற்றும் வளர்மதி கரு.ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.





திருவெண்ணெய்நல்லூர் வட்டாட்சியராக திரு. எம். ரகுராமன் பொறுப்பேற்று கொண்டார்.

# ஆம்பூர் அருகே
# சேமிப்பு கிடங்கில் திடீர் தீ விபத்து; சுமார் ரூ. 4 லட்சம் மதிப்பிலான தோல் கழிவு எரிந்து சாம்பல்!

வாணியம்பாடி, அக்.29

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த பாங்கிஷாப் பகுதியை சேர்ந்தவர் அக்பர் பாஷா. இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக துத்திப்பட்டு ஊராட்சி அம்பேத்கார் நகர் முதல் தெருவில் தோல் கழிவுகள் சேமிப்பு கிடங்கு நடத்தி வருகிறார். இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தோல் கழிவுகள் சேமிப்பு கிடங்கு விடுமுறை காரணமாக மூடிய நிலையில் இருந்தது. இந்த நிலையில் கிடங்கில் மாலை 6.30 மணி அளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக அக்கம் பக்கத்தினர் உமராபாத் போலீஸார் மற்றும் தீயணைப்பு



துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து தீயனைப்பு துறையினர் விரைந்து சென்று சுமார் 1 மணி நேரம் போராடி தீயைகட்டுக்குள்கொண்டு வந்தனர். தீ விபத்து காரணமாக கிடங்கில் இருந்த சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான தோல் கழிவுகள் எரிந்து சாம்பல் ஆனது. தீ விபத்து காரணமாக அப்பகுதி புகை மண்டலமாக காணப்பட்டது. சம்பவம் குறித்து உமராபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.29க்குட்பட்ட கணபதி, மீனாட்சி நகர் பூங்காவில் நடைபெற்ற வார்டு சிறப்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகளை மேயர் .கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் கேட்டறிந்து, கோரிக்கைகள் மீது நடவடிக்கைகள் எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் உதவி ஆணையர் திரு.துரைமுருகன், உதவி செயற்பொறியாளர் திரு.சத்தியமூர்த்தி, உதவி பொறியாளர்கள் சக்திவேல், திரு.நாசர், சுகாதார ஆய்வாளர் திரு.பாஸ்கர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# வத்தலகுண்டுவில் உலக நன்மை வேண்டி கோலாட்ட ஜோத்திரை!

வத்தலகுண்டு,அக்.29

வத்தலகுண்டு அக்ரஹாரத்தில் உலக நன்மை,விவசாயம் செழிக்க,மழை வேண்டி கோலாட்ட ஜோத்திரை நடைபெற்றது. வத்தலகுண்டு அக்ரஹாரத்தில் உள்ள ஹரே ராமா பஜனை மடத்தில் ஒவ்வொரு ஆண்டு தோறும் தீபாவளி மறுநாளில் தொடங்கி 9ஆவது நாள் கோலாட்ட ஜோத்திரை வெகு விமர்சியாக கொண்டாடப் பட்டு வருவது வழக்கம்.

அதேபோல் இந்த ஆண்டு ரிஷப ராசி வாகனம் சிவபெருமாள் எழுந்தருளும் வாகனங்களின் ஒன்றான சிவனின் வாகனம் களிமண்ணால் செய்யப்பட்டு பசுவன் பிள்ளை தலையில் வைத்து கோவில் தெரு, நடுத்தெரு,அக்ரகார தெருவில் வானவேடிக்கை மேளதாளம் முழங்க கோலாட்ட ஜோத்திரை பாடல்களை பாடி பெண்கள் கோலாட்டத்துடன் பார்ப்பவர்களின் கண்ணை வியக்கும் அளவிற்கு வீதி உலா





சென்று ஹரே ராமா பஜனைமடம் வந்தடைந்தனர்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஹரே ராம பஜனை மடத்தினர் மற்றும் பிராமின சங்கத்தினர் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஓசூர் மாநகர 37 வது வார்டு பகுதியில்
# டிவிஎஸ் நகரில் ஓசூர் மாநகராட்சி வார்டு சிறப்பு கூட்டம்!

கிருஷ்ணகிரி,அக்.29

தமிழக முழுவதும் நகராட்சி மாநகராட்சி பகுதிகளில் வார்டு சிறப்பு கூட்டம் நடத்த வேண்டும் என தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி 37 வது வார்டு பகுதியில் மாநகராட்சி உறுப்பினர் செண்ணீரப்ப தலைமை.

சிறப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் டிவிஎஸ் நகர் அம்பாள் நகர் எஸ்.பிஎம் காலனி மிடிகரபள்ளி ஜவஹர்நகர்ஆகியகுடியிருப்பு சங்க நிர்வாகிகள் கலந்து கலந்துகொண்டு. டிவிஎஸ் நகர் பகுதியில் உள்ள மாநில நெடுஞ்சாலையில் வேகத்தடை அமைத்துத் தர வேண்டும்.



டிவிஎஸ் நகர் மெயின் ரோட்டில்மின்விளக்குகள் அமைத்து தர வேண்டும். என டிவிஎஸ் நகர் அம்பாள் நகர் எஸ்பிஎம் காலனி ஆகிய பகுதி குடியிருப்பு. வாசிகள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர். மனுக்கள் வழங்கினர். இதைப் பெற்றுக் கொண்ட மாமன்ற உறுப்பினர் . செண்ணீரப்ப. உடனடியாக பரிசீலனை செய்து அதிகாரிகளிடம் பேச்சு வார்த்த நடத்தி. நடவடிக்கை எடுத்து கோரிக்கைகளை நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார். நிகழ்ச்சியில். ஓசூர் மாநகராட்சி இளநிலை பொறியாளர் வெங்கட்ராமப்பா தொழில்நுட்ப உதவியாளர் வடிவேல். என அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சிம்பிள் எனர்ஜி தமிழ்நாட்டில் தடம் விரிவுபடுத்துகிறது; சேலத்தில் புதிய மையம் திறப்பு!

சேலம்,அக்.29

பெங்களூரை தலைமையிடமாகக் கொண்ட ஆட்டோமொபைல் நிறுவனம் சிம்பிள் எனர்ஜி, தமிழ்நாட்டில் தனது தடத்தை விரிவுபடுத்தி சேலத்தில் புதிய ஷோரூமை திறந்துள்ளது. வைப் வீல் (VIBE WHEEL) நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்ட இந்த சிம்பிள் ஸ்டோர் 947 சதுர அடியில் அமைந்துள்ளது.

இதற்கு 100 மீட்டர் தொலைவில், 1,250 சதுர அடியில் பரந்த சேவை மையம் வாடிக்கையாளர்களுக்கு விரைவான பராமரிப்பு சேவை யை வழங்குகிறது. நவீன வடிவமைப்புடன் கூடிய இந்த மையம், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பிராண்ட் அனுபவத்தை வழங்குகிறது. இங்கு சிம்பிள் ஒன் ஜென் 1.5, சிம்பிள் ஒன்S மற்றும் பல ஆக்சஸரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. திறப்பு விழாவில், நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சுஹாஸ் ராஜ்குமார் அவர்கள் சேலம் நகரின் முன்னேற்ற மனப்பான்மையை பாராட்டி, இது நிறுவன வளர்ச்சியின் அடுத்த கட்டம் என குறிப்பிட்டார். சிம்பிள் எனர்ஜி தற்போது பெங்களூர், கோவா, விஜயவாடா, ஹைதராபாத், விசாகபட்டினம், கொச்சி, சென்னை, ஜெய்ப்பூர் உள்




ளிட்ட நகரங்களில் 58 ஷோரூம்களைக் கொண்டுள்ளது. விரைவில் டெல்லி, போபால், பட்டணா, ராஞ்சி, புவனேஸ்வர் நகரங்களிலும் விரிவடைய உள்ளது. சிம்பிள் ஒன் ஜென் 1.5 மாடல் விலை ரூ.1,71,944 (எக்ஸ் ஷோரூம், சேலம்) மற்றும் சிம்பிள் ஒன்S மாடல் விலை ரூ.1,39,999 ஆகும். வாடிக்கையாளர்கள் https://www.simpleenergy.in/ இணையதளத்தின் மூலம் டெஸ்ட் ரைடு அல்லது முன்பதிவு செய்யலாம். புதிய சிம்பிள் ஸ்டோர் 162, சுதர்சன் பிளாசா, ஜங்ஷன் மேன் ரோடு, சோனா எஞ்சினியரிங் கல்லூரி அருகில், சேலம் என்ற முகவரியில் அமைந்துள்ளது.





கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் ஊழல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி.

# கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் ஊழல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி!

கள்ளக்குறிச்சி,அக்.29

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்திரு.G.S மாதவன் அவர்கள் தலைமையில் ஊழல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்கப் பட்டது.

உறுதிமொதி – "நமது நாட்டின் பொருளாதாரம் அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு குடிமக்கள் மற்றும்தனியார்நிறுவனங்கள்ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன்.

எனவே நான், • அனைத்து செயல்களிலும் நேர்மையும் சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும்,

• லஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும்,

• அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவேன் என்றும், • பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றுவேன் என்றும், • தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாகச் செயல்படுவேன் என்றும்,

• ஊழல் தொடர்பானநிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்குத் தெரியபடுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன். இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், திரு. சரவணன்,

திரு.திருமால், துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு.ஜெயசத்திரன், தனிப்பிரிவு காவல் ஆய்வளர் திரு.சக்தி, மாவட்ட காவல் அலுவலர்கள் மற்றும் ஆயுதப்படை காவலர்கள் கலந்துகொண்டு ஊழலுக்கு எதிரான உறுதிமொழியினை ஏற்றனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்2, தீரன் சின்னமலை வடக்கு பேருந்து நிலையத்தில்பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு.ந.தினேஷ்குமார் மற்றும் ஆணையாளர் எம்.பி.அமித் ஆகியோர் தலைமையில் மைய அலுவலக வளாகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மழைக்காலங்களில் மீட்பு பணிகளுக்கு பயன்படுத்தும் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் 4 மண்டலங்களுக்கு வழங்கினார்கள். உடன் துணை ஆணையாளர் திரு.சுந்தரராஜன், செயற்பொறியாளர் (பொ) திரு. ஹரி, உதவி செயற்பொறியாளர்(பொ) திரு.ராம்மோகன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண்.100க்குட்பட்ட மூராண்டம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற வார்டு சிறப்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை ஆளுங்கட்சித் தலைவர்/மாமன்ற உறுப்பினர் .கார்த்திகேயன் முன்னிலையில் மாநகராட்சி ஆணையாளர் திரு.மா.சிவகுரு பிரபாகரன் பெற்றுக் கொண்டார். உடன் துணை ஆணையாளர் த.குமரேசன், தலைமைப் பொறியாளர் விஜயகுமார், துணை மாநகர பொறியாளர் இளங்கோவன், உதவி ஆணையர் திரு.தட்சிணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் திரு.கனகராஜ், மண்டல சுகாதார அலுவலர் ஆண்டியப்பன், உதவி பொறியாளர் சபரிராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்பு!

திருப்பத்தூர் அக்.29

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில், மாவட்ட காவல் கண்காணிப் பாளர் வி. சியாமளா தேவி தலைமையில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதி மொழியினை எடுத்துக் கொண்டனர்.

பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவேன் என்றும் தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்கு தெரியப்படுத்துவன் என்றும் உறுதி கூறுகிறேனஎன்று.உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்,



இந்த உறுதி மொழி, நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன் . நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன்.

எனவே,நான்அனைத்து செயல்களிலும் நேர்மையையும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும், லஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவும் மாட்டேன் என்றும், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படை தன்மையுடன் செயல்படுத்தேன் என்றும்,

காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதேபோன்று உறுதி மொழி அனைத்து காவல் நிலையங் களிலும் எடுத்துக் கொண்டனர்.




## தாயுமானவர் திட்டத்தில் இணைக்க கோரிக்கை:

# விழுப்புரத்தில் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு, கலந்தாய்வு கூட்டம்!

விழுப்புரம்,அக் 29

விழுப்புரம் மாவட்ட புதிய அலை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு அறக்கட்டளை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் கலந்தாய்வு கூட்டம் இன்று காலை விழுப்புரம் மாம்பழபட்டு சாலையில் உள்ள எம்.கே. மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்மாவட்ட தலைவர் சி.மாரிமுத்து அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக ஒன்ஸ்டெப் யூனிட்டி காப்பாளர் விவேக் கிராம மேம்பாட்டு பவுண்டேஷன் ஆப் இந்தியா ஆலோசகர் அறவழி மாநில பொதுச்செயலாளர் எஸ் அண்ணாமலை உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாய்ந்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடைபெறவுள்ளது. (தாயுமானவர் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளையும் இணைக்க கோரிக்கை முதியவர்களுக்கு தாயுமானவர் திட்டத்தின் மூலம் ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், அதேபோன்று உடல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளையும் இந்த திட்டத்தில் இணைத்து அவர்களுக்கும் மாதந்தோறும் ரேஷன் பொருட்கள் வழங்க வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் தாங்களே வேலை செய்ய முடியாத நிலையிலும், வாழ்வாதார சிக்கல்களை எதிர்கொண்டு வருவதால், அவர்களும் முதியவர்களைப் போல் அரசுஉதவித்திட்டங்களின் கீழ் உணவுப் பொருட்கள் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த கோரிக்கையை அரசு கவனத்தில் கொண்டு விரைவில் நேர்மறை நடவடிக்கை எடுக்குமாறு மாற்றுத்திறனாளிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி மே 3 மாநில பொதுச்செயலாளர் அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது.

# குடியிருப்பு பகுதியில் சுடுகாடு அமைக்க கிராம மக்கள் எதிர்ப்பு கலெக்டரிடம் நேரில் மனு!

திருப்பத்தூர் அக் 29

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் கலெக்டர் சிவ சௌந்திரவல்லி தலைமையில் நடைபெற்றது. இதில் கந்திலி ஒன்றியம் குனிச்சி ஊராட்சி சின்ன குனிச்சி பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் பகுதியில் எந்த ஒரு முன் அறிவிப்பு இன்றிமாவட்டநிர்வாகம் சார்பில் இஸ்லாமிய மக்களு க்கும், கிருஸ்தவ மக்களுக்கும் சுடுகாடு அமைக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் குடியிருப்பு பகுதியில் சுடுகாடு அமைக்கப்பட்டால் அதன்மூலம் சுற்றுச்சூழல் ஏற்படும் மேலும் பெண்கள் குழந்தைகள் பெரும் அளவில் பாதிக்கப்படுவார்கள் என எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர். அதேபோன்று கைலாசகிரி ஊராட்சியில் அரசியல் கால்புணர்ச்சி காரணமாகவும் ஊராட்சி நிர்வாகத்தை சீரழிக்கும் நோக்கில் சில நபர்கள் தனக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தும் தனக்கு அவப்பெயர் ஏற்படுத்துவகையில் செயல்படும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கைலாசகிரி ஊராட்சி மன்ற தலைவர் ரமணி ராஜசேகர் என்பவர் கலெக்டரிடம் மனு அளித்தனர் மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் உங்கள் மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில்426மனுக்கள் பெறப்பட்டது. இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட திட்ட இயக்குனர் உமா மகேஸ்வரி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கதிர் சங்கர், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்ராஜா பிரகாஷ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உட்பட பலர்கலந்துகொண்டனர்.



குடியிருப்பு பகுதியில் சுடுகாடு அமைக்க கிராம மக்கள் எதிர்ப்பு கலெக்டரிடம் நேரில் மனு



# நத்தம் அருகே தமிழர்தேசம் கட்சி ஆலோசனை கூட்டம்!

நத்தம், அக்,29

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கணவாய்கருப்புசுவாமி கோவிலில் தமிழர்தேசம் கட்சி சார்பில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதற்கு மாநில செயலாளர் பூமிஅம்பலம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பிரபு அம்பலம்,இணை செயலாளர்கள் வெள்ளிமலை, பெரியகருப்பன், அண்ணாமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அடுத்த ஆண்டு ஜனவரியில் திருச்சியில் நடைபெறும் முத்தரையர் அரசியல் அதிகாரம் மீட்பு மாநாட்டில் திரளாக கலந்து கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. முன்னதாக 50க்கும் மேற்பட்டோர் மாற்றுக்கட்சிகளில் இருந்து விலகி தமிழர் தேசம் கட்சியில் தங்களை இணைத்து கொண்டனர்.இதில் தமிழர் தேசம் கட்சி மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், சின்னபுத்தூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

# சதய விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரங்கள் அடங்கிய அழைப்பிதழ்கள்!

தஞ்சாவூர், அக்.29

தஞ்சாவூர் பெரிய கோவில் உலக புகழ் பெற்றது .பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழன் சதய விழா ஆண்டுதோறும் ஐப்பசி சதய நட்சத்திரம் அன்று 2 நாட்கள் விழாவாக கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது . அதன் படி இந்த ஆண்டு 1040வது சதய விழா வருகிற 31 மற்றும் 1 ஆகிய தேதிகளில் ( வெள்ளி, சனிக்கிழமை ) நடைபெற உள்ளது. இதற்கான பந்தல் கால் நடும் விழா கடந்த வாரம் நடைபெற்றது. இந்த நிலையில் 1040வது சதய விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரங்கள் அடங்கிய அழைப்பிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது . இந்நிகழ்ச்சிக்கு சதய விழாக்குழு தலைவர் து.செல்வம் தலைமை தாங்கினார்.துணைத்தலைவர் மேத்தா முன்னிலை வகித்தார். அரண்மனை பரம்பரை அறங்காவலர் பாபாஜிராஜா போன்ஸ்லே அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர் சதய விழாவில் நடைபெறும் நிகழ்ச்சி கள் குறித்து விழாக் குழுவினர் கூறியதாவது ,

விழாவில் முதல் நாளான 31ந்தேதி காலை 8.15 மணிக்கு தஞ்சை அரண்மனைவளாகத்தில்இருந்து நாட்டுப்புற கலைஞர்கள் பங்குபெறும் மாபெரும் சதய விழாஊர்வலம்நடைபெறுகிறது. இந்த ஊர்வலத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் தொடங்கி வைக்கிறார். இதில் எம்.பி.க்க ள், எம்.எல்.ஏ.க்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொள்ள உள்ளனர். காலை 9 மணிக்கு பெரிய கோவில் வளாகத்தில் 1040ம் ஆண்டு சதய விழாவை முன்னிட்டு 400 கலைஞர்கள் பங்கேற்கும் பரதநாட்டிய புஷ்பாஞ்சலி நடைபெறும். இந்த தொடக்கவிழா நிகழ்ச்சிக்கு கலெக்டர் பிரியங்காபங்கஜம் தலைமை தாங்குகிறார். இதனைத் தொடர்ந்து வரலாறாக வாழும் மாமன்னன் ராஜராஜன் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இதனை அடுத்து பிற்பகலில் நாதசுரம், குரலிசை, பரதநாட்டியம், சாமியாட்டம், பொய்க் கால் குதிரை ஆட்டம் உள்ளிட்ட மேடைநிகழ்ச்சிகள் நடைபெறும். மாலை 3 மணிக்கு பரதநாட்டியம், அதனைத் தொடர்ந்து தேவாரம், நடனம், பரதநாட்டியம் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு சந்திக்க வருகிறோம் ராஜராஜனே என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறுகிறது. பின்னர் பரதநாட்டியம் ,வில்லுப்பாட்டு, பொன்னிவள நாட்டின் போர்வாள் என்ற டிஜிட்டல் வடிவில் மாமன்னர் ராஜராஜ சோழன் வரலாற்று நாடகம் நடைபெறுகிறது . விழாவில் இரண்டாம் நாளான 1ந்தேதி காலை 6:30 மணிக்கு மங்கல இசை நடைபெறும். பின்னர் 7 மணிக்கு கோவில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்கப்பட உள்ளது.

அதன் பின்னர் மாமன்னர் ராஜராஜன் உருவ சிலைக்கு மாலை அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்னர் திருமுறைவீதிஉலாநடக்கிறது. தொடர்ந்து தருமபுர ஆதீனம் 27வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பிரமாச்சாரியார்சுவாமிகள் தலைமையில் பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பேரபிஷேகம் நடைபெறும். மதியம் 1 மணிக்கு பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு பெருந்தீப வழிபாடு நடைபெற உள்ளது . தொடர்ந்து மங்கள இசை, பரதநாட்டியம், தேவாரப் பண்ணிசை நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு பெருவுடையார், பெரியநாயகி உருவ செப்பு திருமேனிகள் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதி உலா நடைபெறுகிறது. இரவு 7.05 மணிக்கு 5 பேருக்கு மாமன்னன் ராஜராஜன் விருதை குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் வழங்கி அருளுரை வழங்குகிறார். தொடர்ந்து ராஜராஜ சோழன் மாமன்னனாக திகழ பெரிதும் காரணம் மக்கள் பணியா ? மகேசன் பணியா ? என்ற தலைப்பில் டிவி புகழ் ராஜா நடுவராக பங்கேற்கும் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. இரவு 9.30 மணிக்கு திரைப்பட பின்னணி பாடகர்கள் செந்தில் ராஜலட்சுமி குழுவினரின் மாபெரும்நாட்டுப்புறஇன்னிசை மழை நடக்கிறது என கூறினர். இந்த நிகழ்ச்சியில் சதய விழா குழு உறுப்பினர் பொறியாளர் ராமநாதன், இந்து சமய அறநிலையத் துறை கண்காணிப்பாளர் ரவி, செயல் அலுவலர் சத்யராஜ், மேற்பார்வையாளர் செந்தில், மார்னிங் ஸ்டார் பள்ளி தாளாளர் அறிவானந்தம், பாம்பே ஸ்வீட்ஸ் உரிமையாளர் சுப்ரமணி சர்மா, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநகர செயலாளர் ஜெயக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பருவநிலை மாற்றங்களின் போது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது எப்படி?

கோவை, அக் 29

பருவங்கள் மாறும் போது, அவற்றின் தாக்கமும் நம் ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மாறுபட்ட வெப்பநிலை மற்றும் அன்றாட செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பாதித்து, சளி, காய்ச்சல்மற்றும்சோர்வை ஏற்படுத்தும்.இது குறித்து புதுடெல்லியில் உள்ள மேக்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் உணவுமுறைப் பிரிவின் பிராந்தியத் தலைவரான ஊட்டச்சத்து நிபுணர் ரித்திகா சமதர் கூறுகையில், பருவ நிலை மாறும் காலங்களில் நீங்கள் ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் இருப்பதற்கு உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த வேண்டும். ஒரு வலுவான நோய் எதிர்ப்பு அமைப்பு என்பது சீரான உணவு, கவனமுள்ள பழக்கவழக்கங்கள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையுடன் தொடங்குகிறது. அதற்கு பாதாம், பச்சை காய்கறிகள் மற்றும் கொழுப்பு நிறைந்த மீன்கள் போன்ற பல்வேறு ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவதோடு, தினமும் சிறிய அளவிலான உடற்பயிற்சியில் ஈடுபடுங்கள். இதற்கு கூடுதலாக கலிபோர்னியா பாதாம் எடுத்துக்கொள்ளும்போது அது உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தும்.மேலும் பருவங்கள் மாறும்போது வலுவான நோய் எதிர்ப்பு சக்தியைப் பராமரிக்கும் நடைமுறை குறிப்புகள் குறித்து ரித்திகா கூறுகையில், கலிபோர்னியா பாதாமில் வைட்டமின் ஈ மற்றும் துத்தநாகம் நிறைந்துள்ளன, இது நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு ஒரு கேடயமாகவும், மாறிவரும் பருவத்தில் உங்களை வலுவாக வைத்திருக்க பாதுகாப்பு கவசமாகவும் செயல்படுகிறது. இதில் உள்ள காப்பர், நோய் எதிர்ப்பு மண்டலத்தின்



இயல்பான செயல்பாட்டை ஆதரிக்கிறது. போதுமான ஊட்டச்சத்து உடன் உங்கள் உடலை ரீசார்ஜ் செய்யவும், சரிசெய்யவும் போதுமான ஓய்வு தேவை. உங்கள் நோய் எதிர்ப்பு அமைப்பு மீள்தன்மையுடனும், பருவகால மாற்றங்களைச் சமாளிக்கத் தயாராகவும் இருக்க, ஒவ்வொரு நாள் இரவும் குறைந்தது 7 முதல் 8 மணிநேரம் நிம்மதியாக தூங்குங்கள்.

வெப்பநிலை குறையும்போது, பலர் குறைவாக தண்ணீர் குடிக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் போதுமான அளவு தண்ணீரை குடிக்கும்போது அது உடல் செயல்பாடுகளை சீராக்க உதவுகிறது, செரிமானத்தை ஆதரிக்கிறது மற்றும் நச்சுகளை வெளியேற்றுகிறது, நாள் முழுவதும் உங்களை புத்துணர்ச்சி யுடனும் ஆற்றலுடனும் வைத்திருக்கிறது.சாலடுகள் அல்லது புதிய பழங்கள் போன்ற எளிதில் செரிமானம் ஆகும், நார்ச்சத்து நிறைந்த உணவுகளுடன் இனிப்பு உணவுகளை சேர்த்து சாப்பிடவும். சால்மன் மீன் மற்றும் ஆளி விதைகள் போன்றவற்றை சாப்பிடவும். அவை வீக்கத்தைக் குறைத்து நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவும் ஒமேகா3 கொழுப்பு அமிலங்கள் இதில் உள்ளன.ஒரு சிறிய உடற்பயிற்சிகூட பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அது ஒரு விறுவிறுப்பான நடைப்பயிற்சி அல்லது குடும்பத்துடன் நடனமாடுவது என எதுவாக இருந்தாலும், சுறுசுறுப்பாக இருப்பது ரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது மற்றும் பருவகால சோர்வை எதிர்த்துப் போராட உதவுகிறது. தினசரி 10 முதல் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யும்போது அது உங்களை நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.பருவநிலை மாற்றத்தின்போது, நாம் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க நோய் எதிர்ப்பு மண்டலத்தை முறையாக பராமரிப்பது அவசியம் ஆகும். கலிபோர்னியா பாதாம் மற்றும் சால்மன் மீன் போன்ற ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவது, உடலில் நீர் சத்து குறையாமல் பார்த்துக் கொள்வது, நன்றாக தூங்குவது மற்றும் சுறுசுறுப்பாக இருப்பது போன்ற எளிய ஆனால் பயனுள்ள பழக்கங்களை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த முடியும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



உளுந்தூர்பேட்டை வட்டாச்சியராக பாலசுப்பிரமணியன் அவர்கள் பொறுப்போற்றுக்கொண்டார்.



ராஜராஜசோழன் 1040வது சதய விழா அழைப்பிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி





# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு!

திருப்பத்தூர் அக். 29

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் 27.10.2025 முதல் 02.11.2025 வரை கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு, லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் க. சிவசௌந்தரவல்லி தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுக்கும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் செல்வம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணமூர்த்தி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கதிர் சங்கர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மிரியாம் ரெஜினா மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு உறுதி மொழி ஏற்றனர்.



கையுன்னி அரசுபள்ளியில் வைத்து நீலகிரி நடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச்செயலாளர் அண்ணன் ஆ.ராசா பிறந்தநாளை கொண்டாடும் விதமாத, பந்தலூர் மத்திய ஒன்றியம் கையுண்ணி கிளைக் கழகம் சார்பாக, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜார்ஜ் ஏற்பாட்டில் கையுண்ணி அரசு ஊராட்சி ஒன்றிய உயர்நிலை பள்ளி, தொடக்கப் பள்ளி மற்றும் மழலையர் பள்ளி குடிந்தைகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டப்பட்டது. இந்த நிகழ்சியில் மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் நவுபுல், முன்னால் கான்சிலரும்,மணல்வயல் கிளைச் செயலாளர் பிரவின்,ஐடிவிங். ராஜ்,கிளைச் செயலாளர்கள் மற்றும் பிஎல்சி உறுப்பினர்கள் மயில், பூபாலன், நிகில் மற்றும் ஆசிரிய பெருமக்கள் பள்ளிக் குழந்தைகள் கலைந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆம்பூர் அருகே

# ஊராட்சி மன்றத் தலைவரைக் கண்டித்து கிராமமக்கள் போராட்டம்!



ஆம்பூர் அக்.29

ஆம்பூர் அடுத்த கைலாச கிரி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமமுகவைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர் ரமணி ராஜசேகரன் என்பவர் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும், அப்பகுதியைச் சேர்ந்த பலரிடம் கைலாசகிரி, பூஞ்சோலை நகர் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தில், பலருக்கும் இடம் தருவதாகக் கூறி ஏமாற்றியதாக கூறப்படும் நிலையில், மத்திய அரசின் வீடு வழங்கும் திட்டத்திலும், தமிழக அரசின் வீடு வழங்கும் திட்டத்திலும், வீடு வழங்குவதாகக் கூறி பயனாளிகளிடம் தலா 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை பணம் லஞ்சமாக பெற்றுக் கொண்டு உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், இருளர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 2 வீடுகள் முறைகேடு செய்து ஊராட்சி மன்றத் தலைவர் , மற்றும் ஒப்பந்ததாரர் வீடு கட்டியுள்ளதாகவும், இது குறித்து கேள்வி கேட்பவர்களை, ஆள் வைத்து மிரட்டி வருவதாகவும், மேலும் அப்பகுதியில் ஊராட்சி பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட (சின்டெக்ஸ்) குடிநீர் தொட்டியில் இருந்து குடிநீர் வழங்காமல், தங்களுக்காக இந்த குடிநீர் தொட்டி அமைத்ததாகக் கூறி இருளர் இன மக்களை அலட்சியப்படுத்தியுள்ளனர்.

இதனால் தங்களுக்கு உரிய நியாயம் வழங்கக்கோரி பொதுமக்கள் கைலாசகிரி ஊராட்சிமன்ற அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் முறைகேடாக செயல்பட்டு வரும் ஊராட்சி மன்றத் தலைவர் குறித்து பலமுறை புகார் மனு அளித்தும், எந்தவித மான நடவடிக்கையும் மேற்கொள்ளாத வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வருவாய்த் துறையினரை கண்டித்து கோஷங்களை எழுப்பி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஆம்பூர் வட்டாட்சியர் ரேவதி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரை கிராம மக்கள் முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து வட்டாட்சியர் ரேவதி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் மகராசி உள்ளிட்ட அதிகாரிகள் சம்பந்தப் பட்ட இடத்திற்கு சென்று பயனாளிகளுக்கு கட்டப்பட்ட வீடுகளை ஆய்வு மேற்கொண்ட போது இருளர் இன மக்களுக்கு வழங்கப்பட்ட 2 இலவச வீடுகள் ஊராட்சி மன்றத் தலைவர் முறைகேடு செய்து கட்டப்பட்டது தெரிய வந்ததை அடுத்து முறைகேடு செய்யப்பட்ட வீட்டினை, வீடு இல்லாத பயனாளிகளுக்கு கொடுப்பதாக உறுதி அளித்த பின்னர், பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இதனால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரத்துக்கு மேலாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



# கூடலூரில் மினிபஸ் சேவை முன்னாள் எம்எல்ஏ திராவிட மணி துவக்கி வைத்தார்!

கூடலூர் அக்.29

நீலகிரி மாவட்டம் கூடலூர் மக்களின் நீண்ட கால கோரிக்கையான மினிபஸ் சேவையை முன்னாள் எம்எல்ஏ திராவிட மணி துவக்கி வைத்தார். அதன் விபரம் வருமாறு:

நீலகிரி மாவட்டம் கூடலூர் நகரத்திற்குட்பட்ட அல்லூர் ஏழுமுறம் . தோட்ட மூலா சளிவயல் தர்மகிரி ஆகிய மக்களின் நீண்ட கால கோரிக்கையான மினிபஸ் சேவை இருந்து வந்தது.

இந்த நிலையில் இப்பகுதிகளுக்கு மினிபஸ் சேவையை கூடலூர் நகர கழக செயலாளர் இளஞ்செழியன் தலைமையில், கூடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும்,கழக தலைமை செயற்குழு உறுப்பினருமான திராவிடமணி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ், நகர் மன்ற தலைவி பரிமளா, வார்டு செயலாளர்கள் ராஜி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மகேஸ்வரன், சந்திரகுமார், நகர இளைஞரணி அமைப்பாளர் விஜயகுமார், துணை அமைப்பாளர் அபுதாஹிர், நகர் மன்ற உறுப்பினர்கள் சத்தியசீலன் ,உஷா,மும்தாஜ், நடராஜ், பாண்டியன், உன்னிகிருஷ்ணன், பால்ராஜ், துரைராஜன்,மகளிர் அணியினர் ஜோதி, சபியா, புனிதா சாரா மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் ஊர் பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# போச்சம்பள்ளி அருகே உள்ள புலியூர் கிராமத்தில் செல்வவிநாயகர் கோவில் கும்பாபிஷேகம் விழா!

கிருஷ்ணகிரி,ஆக்.29

கிருஷ்ணகிரிமாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள புலியூர் கிராமத்தில் உள்ள பழைமை வாந்த ஸ்ரீ செல்வ விநாயகர் கோவிலில் இன்று காலை மகா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது.மஞ்சமேடு ஆற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தத்திற்கு இரண்டுகாலயாகவேள்வி பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்துயாகசாலையில் இருந்து கலசங்களை சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்தவாறு மேளகர்த்தாளங்களுடன் கோவிலை சுற்றி வலம் வந்து வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்திற்கும் பரிவார



தெய்வங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து செல்வ விநாயகருக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் அலங்காரம் செய்யபட்டு விநாயகர் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேகம்விழாவை ஊர் பொது மக்கள் செய்திருந்தனர்.


